முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திருமதி பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,

முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 1 நாள்.30.06.2022

| | | | |
|---|---|---|---|
| எச்.எம்.ஓ.பி. எண். | 85/2021 | | |
| பெயர் | கோகிலா | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் என் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டி தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் ஏற்கனவே விவாகரத்து வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில் நான் எனது வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளேன். நான் எனது கணவர், மாமியார், மாமனார், நாத்தனார் ஆகியோர்கள் மீது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறையில் டி.வி.சி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த டி.வி.சி வழக்கு என் கணவர் மீது நான் தாக்கல் செய்யவில்லை. நான் எனது கணவர் மீதும் தான் தண்டனை வழங்க வேண்டும் என கேட்டு அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவர் மீதும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் தற்போது தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் நர்சிங் படித்துள்ளேன். வேலை எதுவும் பார்க்கவில்லை. நான் வில்லயநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் உதவி செவிலியராக பணிபுரிகிறேன் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பணிபுரியவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர், மாமியார், மாமனார் என்னை நல்ல முறையில் தான் பாராமரித்துள்ளார் என்றும், அவர் என்னை கொடுமைப்படுத்துவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவர் மீது பொய்யாக சந்தேகப்பட்டு பிரச்சனை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் எனக்கு போட்ட 13 பவுன் நகையில் 3 பவுன் நகையை நான் எனது அக்காவிடம் கொடுத்துவிட்டதால் அவர் என்னிடம் தங்கம் கேட்டதற்கு கோபித்து கொண்டு பிரச்சனை செய்து பொய்யாக புகார் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதன் பின்னர் என்னை சமாதானம் படுத்தி நான் கருவுற்றிருந்ததால் வளைகாப்பு செய்து பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு குழந்தை

பிறந்தவுடன் எனது பெற்றோர்கள் அந்த தகவலை கணவர் வீட்டாரிடம் சொல்லவில்லை என்றால் சொன்னார்கள். அதன் பின்னர் அவர்கள் குழந்தை பார்க்க வந்த போது என் பெற்றோர்கள் அவமானம் படுத்தி அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. பலமுறை நேரிலும் உறவினர்கள் மூலமாகவும் சேர்ந்து வாழ எனது கணவர் அழைத்தும் நான் வரவில்லை என்றால் சரியல்ல, அவர் கூப்படவே இல்லை. அதனால் எனது கணவர் நான் அவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று கேட்டு இந்நீதிமன்றத்தில் எச்.எம்.ஓ.பி.152/2020 மனு தாக்கல் செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் நான் எனது கணவா் மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் அந்த வழக்கு பற்றி தெரியாது, காவல் நிலையத்தில் எனது கணவருடன் சேர்ந்து வாழ வைக்கவேண்டும் என்று புகார் கொடுத்தேன். அந்த புகார் சம்பந்தமாக விசாரணையில் எனது கணவர் ஊரில் பேசி என்னையும் குழந்தையும் அழைத்து செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். காவல் நிலையத்தில் பேச்சி வார்த்தை நடந்த போது என்னை சேர்ந்தவர்கள் அங்கு ஒன்று கூடி எனது கணவரை மிரட்டியதால் அவர் அச்சமும் அவமானமும் அடைந்து அங்கிருந்து வெளியேறிவிட்டார் என்றால் சரியல்ல. அப்போது நான் எனது கணவரையும் குடும்பத்தாரையும் ஜெயில் வைக்காமல் விடமாட்டேன் மற்றும் வெளி நாட்டிற்கு செல்ல முடியாது என மிரட்டினேன் என்றால் சரியல்ல. உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற எண்ணத்தில் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்து எனது கணவர் பின்வாங்கி கொண்டார் என்றால் இல்லை. அவர் சேர்ந்து வாழ போட மனுவை திரும்ப பெற்று கொண்டார் என்றால் சரியல்ல. இன்றைய நிலையிலும் எனது கணவரை நானும் எனது குடும்பத்தாரும் மிரட்டுவதால் மனதும்பம் அடைந்து விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, ஆனால் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவிற்கு முன்பாக நான் அவர் விவாகரத்து வழக்கு போடுவதற்கு முன்பாக சேர்ந்து வாழ மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் சேர்ந்து வாழ அழைக்க வந்த போது எனது பெற்றோர்கள் அவரை வீட்டிற்குள் வரவிடாமல் வெளி அனுப்பிவிட்டார்கள். எனது மனுவில் எனது கணவர் சத்தியா என்ற பெண்ணை 2ம் திருமணம் செய்து கொண்டார் என்றும் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பலமுறை எதிர்மனுதாரரை நானும் என்னை சார்ந்தவர்களும் மிரட்டியுள்ளதால் சேர்ந்து வாழ்ந்தால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் சேர்ந்து வாழ்வதற்கான சூழ்நிலை இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் வேண்டும் என்றே புறக்கணித்து சென்றுவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.